**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : வான்மதி**

தேதி : 08.06.2025 - நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

அறிவியல், கல்வி, விளையாட்டு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பெண்கள் சிறந்து விளங்கி சாதனை படைத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

வலுவான பேரிடர் எதிர்ப்பு திறன் கொண்ட எதிர்காலத்தை உருவாக்க உலக அளவில் முயற்சிகள் தேவை என பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

7 நாள் அரசு முறை பயணமாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று பிரான்ஸ் மற்றும் பெல்ஜியத்திற்கு செல்ல உள்ளார்.

புதுச்சேரி வில்லியனூர் திருக்காமீஸ்வரர் ஆலயத்தின் தேர் திருவிழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தேரை வடம் பிடித்து தொடக்கி வைத்தார்.

*பிரதமர் நாரி சக்தி* (17)

அறிவியல், கல்வி, விளையாட்டு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பெண்கள் சிறந்து விளங்கி சாதனை படைத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கடந்த 11 ஆண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை மறு வரையறை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். தூய்மை இந்தியா இயக்கத்தின் மூலம் கண்ணியத்தை உறுதி செய்வதில் இருந்து ஜன்தன் கணக்குகள் மூலம் நிதி உள்ளடக்கம் வரை பல்வேறு நிகழ்ச்சிகள் பெண்களின் சக்தியை மேம்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார். உஜ்வாலா யோஜனா திட்டம் பல வீடுகளுக்கு புகையில்லா சமையல் அறைகளை கொண்டு வந்ததாகவும், முத்ரா கடன் திட்டத்தின் மூலம் லட்சக்கணக்கான தொழில் முனைவோர் தங்களது சொந்த கணக்குகளை தொடர முயல்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அறிவியல், கல்வி, விளையாட்டு, ஆயுதபடைகள் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பெண்கள் சிறந்து விளங்கி ஊக்கப்படுத்தி வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். பெண் குழந்தையை பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம் பேட்டி பச்சாவ்- பேட்டி பதாவோ பிரச்சாரத்தையும் அவர் நினைவு கூர்ந்தார்.

*பிரதமர்* (19)

வலுவான பேரிடர் எதிர்ப்பு திறன் கொண்ட எதிர்காலத்தை உருவாக்க உலக அளவில் முயற்சிகள் தேவை என பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார். நடப்பு ஆண்டிற்கான பேரிடர் தாங்கும் உள் கட்டமைப்புகளுக்கான சர்வதேச மாநாட்டில் காணொளி காட்சி மூலம் அவர் உரையாற்றினார். இந்த அமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியமும் இணைந்ததற்கு, மகிழ்ச்சி அடைந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஐரோப்பியாவில் முதன் முறையாக நடைபெறும் இந்த மாநாட்டிற்காக தமது நண்பரும் பிரான்ஸ் அதிபருமான திரு இமானுவெல் மெக்ரானுக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார். கடந்த 2004 ம் ஆண்டு சுனாமி உள்ளிட்ட

பெரிய அளவிலான இயற்கை பேரிடர்களுடன் இந்தியாவின் நினைவுகளை பிரதமர் திரு நரேந்திர மோடி நினைவு கூர்ந்தார். பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் நிவாரண முகாம்களை உருவாக்குதல், சுனாமி எச்சரிக்கை அமைப்பை நிறுவுதல் உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளை இந்தியா வழங்கியதாக பிரதமர் தெரிவித்தார். இயற்கை பேரிடர்களின் போது முன் கூட்டியே எச்சரிக்கும் அமைப்புகளை ஒருங்கிணைப்பதோடு அதனை வலுப்படுத்துவது அவசியம் என்றும் பிரதமர் தெரிவித்தார். இயற்கை பேரிடர் காலத்தில் செயல்படுத்தக் கூடிய திட்டங்களை வடிவமைப்பதுடன், வளரும் நாடுகள் அதற்கான நிதி கிடைப்பதை உறுதி செய்ய திட்டங்களை உருவாக் வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

*பிரதமர் பேச்சுவார்த்தை* (18)

பிரதமர் திரு நரேந்திரமோடியை இங்கிலாந்து வெளியுறவு செயலர் திரு டேவிட் லாமி சந்தித்து பேசியுள்ளார். இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், தமது இந்த பயணத்தின் போது முக்கிய தலைவர்களை சந்தித்து பேசி வருகிறார். அதன்படி, நேற்று பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து பேசினார். அப்போது இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும், இந்தியா - இங்கிலாந்து நாட்டின் கூட்டாண்மை ஆழமடைவது குறித்து அவர் திருப்தி தெரிவித்தார். வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, தொழில்நுட்பம், புதுமை மற்றும் தூய்மையான எரிசக்தி உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து இங்கிலாந்து ஆர்வமாக இருப்பதாக திரு டேவின் லாமி தெரிவித்துள்ளார். சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் புதிய பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சனைகள் குறித்து இரு தலைவர்களும் தங்களது கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை இங்கிலாந்து வெளியுறவு செயலர் கடுமையாக

கண்டித்ததோடு எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாக அவர் கூறினார்.

*பிரதமர் இங்கிலாந்து* (9)

இந்தியா – இங்கிலாந்து இடையே நடைபெற்ற தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டிருப்பதன் மூலம் இரு நாடுகளுடனான நல்லுறவு மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், இந்தியா வந்துள்ள இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் திரு டேவிட் லாமியுடனான சந்திப்பு ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று தெரிவித்துள்ளார். எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு எதிராக இந்தியா மேற்கொண்டு வரும் நடவடிக்கைக்கு இங்கிலாந்து ஆதரவை தெரிவித்துள்ளதற்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

பதினோராம் ஆண்டு 1 (7)

இந்தியா கடந்த 11 ஆண்டுகளில் சேவை, நல்லாட்சி, ஏழைகள் நலன் மற்றும் கரிப் கல்யாண் ஆகியவற்றின் அடிப்படையில் புரட்சிகரமான பல மாற்றங்களை சந்தித்துள்ளது. இந்த 11 ஆண்டுகளில் பல்வேறு முக்கிய துறைகளில் அரசு மேற்கொண்ட முக்கிய முயற்சிகள் குறித்து ஆகாஹ்வாணி சிறப்பு தொடர் ஒன்றை வழங்கி வருகிறது. அந்த வரிசையில் நடுத்தர வர்க்கத்தினர் வளர்ச்சி பாதையை நோக்கி சென்றுக்கொண்டுள்ளனர். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு ....

**(வாய்ஸ்)**

*பதினோராம் ஆண்டு வாய்ஸ் 1* (18)

இந்தியா கடந்த 11 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. இது சேவை சுசாசன் மற்றும் கரிப் கல்யாண் ஆகியவற்றின் கொள்கைகளின் அடிப்படையில் புரட்சிகரமான பல மாற்றங்களை சந்தித்துள்ளது. பிரதான் மந்திரி கரிப் கல்யாண் யோஜனா என்பது இந்தியாவில் தொடங்கப்பட்ட ஒரு அரசு திட்டமாகும். இது சவாலான காலங்களில் சமூகத்தில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக் கூடிய பிரிவினருக்கு நிவாரணம் மற்றும் ஆதரவை வழங்குகிறது. பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் சலுகைகளை வழங்குவதன் மூலம் ஏழைகள் மற்றும் வறியவர்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்களை குறைப்பதை இது நோக்கமாக கொண்டுள்ளது. கரிப் கல்யாண யோஜனா திட்டம் விதவைகள், நோய்வாய்ப்பட்டவர்கள், ஊனமுற்றவர்கள், 60 வயதை கடந்தவர்கள் போன்றவர்களுக்கு உணவளிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. வரி சீர்திருத்தங்கள் மற்றும் நிவாரணங்கள், சமூகபாதுகாப்பு, திறன் மேம்பாடு ஆகியவை நடுத்தர வர்க்கத்தினரை அதிகாரம் அடைய செய்வதற்கான அரசின் முயற்சிகள் முக்கிய தூண்களாக திகழ்கின்றன. சமீபத்திய மத்திய பட்ஜெட்டில் 12 லட்சம் வரையிலான வருமானத்திற்கு, வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டமான யுபிஎஸ் திட்டத்தின் மூலம், 25

*பதினோராம் ஆண்டு வாய்ஸ் 2* (16)

ஆண்டுகள் பணி அனுபவம் கொண்ட அரசு ஊழியர்களுக்கு சராசரி அடிப்படை ஊதியத்தில், 50 சதவிகிதத்தை ஓய்வூதியமான வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், கடந்த 10 ஆண்டுகளில் சராசரி பண வீக்க விகிதமும் 5 சதவிகிதாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது முந்தைய 10 ஆண்டுகளில், 8.2 சதவிகிதமாக இருந்தது. திறன் மேம்பாட்டிற்கான உந்துதலும் அதே அளவு மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. பிரதரின் கவுசி விகாஸ் யோஜனா

திட்டத்தின் கீழ், 1.63 கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்கள், தொழில்துறை சார்ந்த பயிற்சி பெற்றுள்ளனர். கடந்த 2016 ஆம் ஆண்டு தேசிய தொழில் பயிற்சி ஊக்குவிப்பு திட்டம் தொடங்கப்பட்டது முதல் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழில் பயிற்சியாளர்களுக்கு தொழில்களில் பயிற்சி அமர்த்துவதற்கு உதவி செய்யப்பட்டுள்ளது. நாட்டில் தொழில் பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளது. கடந்த 2014 ஆம் ஆண்டில், இது, சுமார் 9 ஆயிரத்து தொள்ளாயிரமாக இருந்தது. 2024 ஆம் ஆண்டில் இது 14 ஆயிரத்து 600 ஆக உயர்ந்துள்ளது. இந்த முயற்சிகள் அனைத்தும் நடுத்தர வர்க்கத்தினர் முன்னேற்றம் அடைவதற்கு உறுதுணையாக உள்ளது.

*அமித் ஷா (8)*

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா 2 நாள் பயணமாக இன்று மதுரை வந்துள்ளார். அவரை மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், மாநில பாஜக தலைவர் திரு நையினார் நாகேந்திரன், பாஜக சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், பாஜக மூத்த தலைவர் திருமதி தமிழிசை சவுந்தரராஜன்ஆகியோர் வரவேற்றனர். வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலுக்கான பாஜக வின் செயல்திட்டம் குறித்து அவர் இன்று கட்சியின் மைய குழு கூட்டத்தில் உரையாற்ற உள்ளார். தொடர்ந்து இன்று மாலை நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் அவர் உரையாற்ற உள்ளார்.

வில்லியனூர் தேர் (8)

புதுச்சேரி வில்லியனூர் திருக்காமீஸ்வரர் ஆலயத்தின் தேர் திருவிழா இன்று காலை நடைபெற்றது. புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் வடம் பிடித்து தேரோட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், அமைச்சர்கள் திரு நமச்சிவாயம், திரு ஜெயக்குமார், திரு சாய் சரவணன்குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு சிவா உள்ளிட்டோர் பங்கேற்றனர். தொடர்ந்து நடைபெற்ற பக்தர்களுக்கான அன்னதான நிகழ்ச்சியை துணை நிலை ஆளுநர் தொடங்கி வைத்தார்.

ஜெய்சங்கர் (12)

7 நாள் அரசு முறை பயணமாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று பிரான்ஸ் மற்றும் பெல்ஜியத்திற்கு செல்ல உள்ளார். அவரது இந்த பிரான்ஸ் பயணத்தின் போது அவர் பாரீஸ் மற்றும் மார்சேய் நகரங்களுக்கு சென்று பிரான்சின் ஐரோப்பிய மற்றும் வெளியுறுவு அமைச்சர் திரு ஜீன் நோயல் பரோட்டுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச உள்ளார். ஐரோப்பிய ஒன்றிய பயணத்தின் போது டாக்டர் ஜெய்சங்கர் ஐரோப்பிய ஒன்றிய உயர் பிரதிநிதி மற்றும் துணை தலைவர் காயா கல்லாசை- சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார். டாக்டர் ஜெய்சங்கர் ஐரோப்பிய ஆணையம் மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் மூத்த தலைவர்களையும் சந்தித்து பேச உள்ளார். அவரது இந்த பயணத்தின் மூலம் ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளுடனான இந்தியாவின் நட்பு மேலும் வலுப்படும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

*சவுகான்* (12)

எளிதில் பயிரிடக் கூடிய பழங்கள் மற்றும் பயிர்களை நோக்கி விவசாயத்தை பல்வகைப்படுத்துவது, இத்துறையின் வளர்ச்சிக்கு அவசியம் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். விக்சித் க்ரிஷி சங்கல்ப் அபியான் திட்டத்தின் ஒரு பகுதியாக இன்று பெங்களுருவில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், டிராகன் பழத்தை பயிரிடுவதன் நன்மைகள் குறித்து எடுத்துரைத்தார். டிராகன் பழ விவசாயத்திற்கு ரசாயண உரங்கள் தேவையில்லை என்றும் அவர் கூறினார். கற்றாழை குடும்பத்தை சேர்ந்த இந்த டிராகன் பழம் நோய் தாக்குதலுக்கு ஆளாக கூடிய வாய்ப்பு குறைவு என்றும் அவர் தெரிவித்தார். சாகுபடியின் முதல் வருடத்திற்கு பிறகு விவசாயிகள் ஆண்டுதோறும் 6 முதல் 7 லட்சம் வரை இப்பழத்தை பயிரிடுவதன் மூலம் ஈட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

நட்டா (12)

உடல் பருமன் மற்றும் அதனை சார்ந்த பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா வலியுறுத்தினார். பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், உணவு கட்டுப்பாட்டு முறைகளை, முறையாக பின்பற்றாவிட்டால் வரும் 2050 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் மக்கள் தொகையில் 3 ல் ஒரு பங்கு மக்கள் உடல் பருமனால் பாதிக்கப்பட கூடிய சூழல் உள்ளதாக அவர் தெரிவித்தார். எனவே, உடல் பருமனுடன் தொடர்புடைய பிரச்சனைகள் குறித்து குழந்தைகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார். உணவில் எண்ணையின் பயன்பாட்டை 10 சதவிகிதம் வரை குறைக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவுறுத்தியதையும், அவர் நினைவு கூர்ந்தார்.

விண்வெளி (12)

இந்திய விண்வெளி வீரர் சுபன்ஷூ சுக்லா வரும் செவ்வாய் கிழமை விண்வெளிக்கு செல்ல உள்ளார். அமெரிக்காவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஆக்சியம் ஸ்பேஸ் என்ற விண்கலம் மூலம் புறப்படும் அவர் சுமார் 28 மணி நேர பயணத்திற்கு பின் புதன் கிழமை இந்திய நேரப்படி, இரவு 10 மணியளவில் சர்வதேச விண்வெளி நிலையத்தில் தரையிறங்க வாய்ப்பு உள்ளது. இந்திய விண்வெளி வீரருடன் அங்கேரியை சேர்ந்த திபோர் கபு மற்றும் போலந்தை சேர்ந்த ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி உள்ளிட்ட 3 விண்வெளி வீரர்களும் விண்வெளி பயணம் மேற்கொள்ள உள்ளனர். 1984 ஆம் ஆண்டு ரஷ்யாவின் சோயுஸ் விண்கலத்தின் மூலம் ராகேஷ் சர்மா பத்திரமாக பூமிக்கு திரும்பி சாதனை புரிந்தார். இதேபோல், சுபான்ஷூ சுக்லாவின் இந்த விண்வெளி பயணமும் வரலாற்று சிறப்பு மிக்கதாக அமையும் என இஸ்ரோ நம்பிக்கை தெரிவித்துள்ளது.